இலங்கையில் ஏற்பட்டுள்ளது அரசியல் மாற்றமல்ல..

நேர்காணல்கள்



அ.தமிழ்ச்செல்வன்

இலங்கையில் ஏற்பட்டுள்ளது அரசியல் மாற்றமல்ல

அ.தமிழ்ச்செல்வன்

a.tamilselvan42@gmail,com

மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/ilangaiyul$_{y}$erpatulathu$_{a}$rasiyal$_{m}$aatramalla

அட்டைப்படம் - B.மீனா - meenabalasundaram@gmail.com

மின்னூலாக்கம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

கணியம் அறக்கட்டளை (kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: B.மீனா - meenabalasundaram@gmail.com

மின்னூலாக்கம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: B.Meena - meenabalasundaram@gmail.com

Ebook Creation: Lenin Gurusamy - guruleninn@gmail.com Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

பதிவிறக்கம் செய்ய - http://freetamilebooks.com/ebooks/ilangaiyul_yerpatulathu_arasiyal_maatramalla

This Book was produced using LaTeX + Pandoc

பொருளடக்கம்

நூல் அறிமுக உரை...

இந்நூல் வெவ்வேறு துறைகளில் ஆளுமைமிக்க மூன்று பேரின் அனுபவங்களின் நேர்காணல்கள்.மேலும் 2 கட்டுரைகளும் கொண்ட தொகுப்பு.

முதலாமவர்- ஓவியர் புகழேந்தி - தன் தூரிகைகளால் சமகால சமூக பிரச்சனைகளை வெளிப்படுத்துவபவர்.ஓவியங்களை பொதுவெளியில் பொதுமக்களிடன் கொண்டு சேர்பவர். . பெரும்பாலான ஓவியர்கள் தங்கள் படைப்புகளை ஆர்ட் கேலரிகளுக்கு உள்ளே வைத்து அழகு பார்ப்பார்கள். ஆனால், இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர் சென்னை ஓவியக் கல்லூரி பேராசிரியர் புகழேந்தி.

இராண்டமவர் - எழுத்தாளர் முத்துக்கிருஷ்ணன்.மதுரை அருகேயுள்ள திருநகரை சேர்ந்தவர்.கள செயல்பாட்டாளர். உயிர்மை உள்ளிட்ட பல இலக்கிய நூல்களின் கட்டுரையாளர். “பசுமைநடை”- என்ற அமைப்பை உருவாக்கி மதுரையை சுற்றியுள்ள வரலாற்று சிறப்புமிக்க இடங்களை பற்றிய இடங்களை பற்றி தகவல்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்தவர். பசுமை நடை 100 வது நடையை முடித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாமவர் -மதுரை - திருமங்கலத்தை சேர்ந்த ஓய்வுபெற்ற முதுகலைத் தமிழாசிரியர் மலர்க்கொடி அவர்கள் “சமூகவியல் நோக்கில் மணிமேகலை” என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சமூகவியல் சிந்தனைகள், அரசியல், குடும்பம், பரத்தமை,பொருளாதாரம்,கல்வி,சமயம் என ஏழு தலைப்பின் கீழ் தனது ஆய்வை மிக நுட்பமாகவும்,எளிமையாகவும் செய்திருக்கிறார். தனது முனைவர் பட்ட படைப்புகளை 256 பக்கங்கள் கொண்ட நூலாக உருவாக்கியிருக்கிறார்.

நான்காவதாக கட்டுரை ஒன்றையும் இனைத்துள்ளேன்.மூன்று நேர்காணல்களும் வரலாற்று தொடர்புடையதாக இருப்பாதலா,எனது கட்டுரையான ”உலகின் முதல் பேரரசனும்

விசித்திர சட்டங்களும்...”- என்ற வரலாற்று கட்டுரையை இனைத்துள்ளேன்.

ஐந்தாவதாக- தமிழ் சினிமாவின் 100 ஆண்டு நிகழ்வுக்காக நான் எழுதிய “பட்டாணிச்செடியும்... இந்திய சினிமாவின் பயணப்பாதையும்...”- என்ற கட்டுரையும் உள்ளது.தமிழ்சினிமாவின் 100 ஆண்டு கால வரலாறு பட்டாணிச்செடியிலிருந்து எப்படி துவங்கி தற்போது வரையான நிகழ்வுகளை சுருக்கமாக சொல்லும் கட்டுரை.

மாறுபட்ட ஆளுமைகளை அவரின் துறை சார்ந்து எடுக்கப்பட்ட நேர்காணல்களை தொகுப்பு இந்நூல்.

நூல் ஆசிரியர் அறிமுக உரை....



நான் தமிழ்ச்செல்வன்.மதுரை மாவட்டம் திருமங்கலத்தை சேர்ந்தவன். 12 ஆண்டுகளுக்கும் மேலாக பத்திரிக்கையாளனான நாளிதழ் ஒன்றில் துணைஆசிரியராக பணியாற்றிவருகிறேன். மேலும் திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவிலிருந்து கடந்த 24 ஆண்டுகளாக வெளிவரும் மகாகவி மாத இதழில் இணை ஆசிரியராக உள்ளேன். சிற்றிதழ்கள், இணைய இதழ்கள்,நாளிதழ்களில் கட்டுரை ,கவிதை,நேர்காணல் எழுதி வருகிறேன்.அந்த வகையில் 4 தமிழ் மீடியா இணைய இதழ், மகாகவி மாத இதழ், தமிழ் வாசல் மாத இதழில் வெளிவந்த எனது நேர்காணல்களின தொகுப்புகள் இந்த மினநூலில் இடம் பெற்றுள்ளன.ஓவியர், எழுத்தாளர்,பேராசிரியர் என வேவ்வேறு ஆளுமைகளின் நேர்காணல் பல புதிய தகவல்களை படிக்கின்ற வாசகர்களுக்கு கொண்டு சேர்க்கும் என நம்புகிறேன்.

என்னை எழுத துண்டுகிற எனது நண்பரும் , மகாகவி மாத இதழின் ஆசிரியருமான வதிலை பிரபா அவர்களுக்கும். எனது எழுத்துபணிக்கு உறுதுணையாக இருக்கும் நண்பர்கள், குடும்பத்தினருக்கும் இந்நூல் சமர்பணம்.

1. இலங்கையில் ஏற்பட்டுள்ளது அரசியல் மாற்றமல்ல..

நேர்காணல் : அ. தமிழ்ச்செல்வன், பொறுப்பாசிரியர், மகாகவி


பிப்ரவரி, 2014



ஓவியனுக்கும், பார்வையாளனுக்குமான தொடர்பு என்பது மாத, வார இதழ்களில் இலக்கிய படைப்புகளுக்கு நடுவே வருகின்ற சில ஓவியங்களே. பெரும்பாலான ஓவியர்கள் தங்கள் படைப்புகளை ஆர்ட் கேலரிகளுக்கு உள்ளே வைத்து அழகு பார்ப்பார்கள். ஆனால், இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர் சென்னை ஓவியக் கல்லூரி பேராசிரியர் புகழேந்தி. இனப் படுகொலைகள், சாதி, மத ரீதியான வன்முறைகள், இயற்கைப் பேரழிவுகள் குறிப்பாக ஈழப்போராட்டம், பாலஸ்தீன விடுதலை, தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டம் போன்ற சமூக நிகழ்வுகளை, மக்கள் பிரச்னைகளை மையமாகக் கொண்ட ஓவியங்களை தனது ஓவியப் படைப்புகளில் கொண்டு வருபவர். ஓவியர் புகழேந்தியின் மற்றொரு தனிச்சிறப்பு மக்கள் பிரச்சனை பேசுகின்ற அவரின் ஓவியங்களை மக்கள் அதிகமாகக் கூடுகிற இடங்களில் கண்காட்சியாக வைப்பது தான். தமிழக அரசின் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கும் இவர் மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, இலங்கை போன்ற நாடுகளில் ஓவியக் கண்காட்சிகளை நிகழ்த்தி இருக்கிறார். நமது "மகாகவி" இதழுக்காக ஓவியர் புகழேந்தி அளித்த நேர்காணல் இது...

இலக்கிய படைப்புகளைப் போல் ஓவியத்தால் கருத்துக்களை வாசகன் மனதில் பதிய வைப்பது

சாத்தியமா ?




இலக்கியப் படைப்புகளுக்கு ஏதோ ஒரு மொழி தேவைப்படுகிறது. அதைப் படைப்பதற்கும் அல்லது வாசிப்பதற்கும். ஆனால், ஓவியப் படைப்பு என்பது உலகப் பொதுமொழி. மொழி எல்லைகளைக் கடந்து, பரந்து விரிந்து அனைத்து மொழி பேசுகின்ற மக்களிடத்திலும் மிக எளிதாகச் சென்றடையும். ஓவியம் ஒரு காட்சி மொழி என்பதால், இலக்கிய படைப்புகளால் ஏற்படுத்த முடியாத தாக்கத்தை ஓவியத்தால் ஏற்படுத்த முடியும். ''ஆயிரம் புத்தகங்களில் பதிவு செய்யப்படும் கருத்தை ஒரு ஓவியத்தில் பதிவு செய்துவிடலாம்'' என்று கன்னட கவிஞர் சித்தலிங்கையா, என்னுடைய ஓவியக் கண்காட்சியில் பதிவு செய்தார். இதுபோல், பலரும் பதிவு செய்திருக்கிறார்கள். எனவே, இலக்கியப் படைப்புகளைப் போல் மட்டும் அல்ல, கூடுதலாகவே தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஓவியங்களில் கருப்பு, வெள்ளை மற்றும் வண்ணம் இதில் எது கருத்துக்களை தீவிரமாக வெளிப்படுத்தும் ?

கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இரண்டுமே சிறந்தது தான். ஆனால், வண்ணத்தில் செய்வதை விட கருப்பு வெள்ளையில் செய்வது கடினம். கருப்பு வெள்ளையில் ஒரு ஓவியத்தை உருவாக்குவதற்கு சரியான புரிதல் வேண்டும். சரியான புரிதலோடு கருப்பு வெள்ளையில் ஒரு

ஓவியத்தைச் செய்ய முடிந்தால், வண்ணங்களில் செய்வது மிக எளிதாகி விடும். கருப்பு வெள்ளை, வண்ணங்களை விட ஆழத்தை *(depth)* கொடுக்கும்.

தமிழகத்தின் ஓவிய வரலாறு குறித்து...



சங்க இலக்கியங்களிலேயே ஓவியங்கள் குறித்த குறிப்பு காணக் கிடைக்கிறது. விழுப்புரம், புதுக்கோட்டை, மதுரை மற்றும் கோவை மாவட்டங்களில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இதுபோன்ற ஓவியங்கள் தான் வரலாற்றுக்கு முந்தைய ஓவியங்கள் *(pre historic paintings)* என்று வரலாற்று ஆய்வாளர்களால் அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு மொழியை பேசுவதற்கு முன்பு, ஓவியம் வழி தான் உரையாடியிருக்கிறான் என்பது விளங்கும். அப்படிப்பட்ட தொன்மையான

வரலாற்றில் தொடங்கும் தமிழக ஓவிய வரலாறு, அடுத்து சுவர் ஓவியங்கள் என்ற வளர்ச்சி நிலையை, சித்தண்ணவாசல், தஞ்சை பெரிய கோவில் போன்ற இடங்களில் பார்க்கலாம். மிக அருமையான செய் நேர்த்தியுடன் கூடிய *Fresco* முறையில் செய்யப்பட்ட சுவர் ஓவியங்கள் *(Mural Painting)* இன்றும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. அதைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல இடங்களில் உள்ள கோவில்களில் *Tempra* முறையில் செய்யப்பட்ட சுவர் ஓவியங்களைக் காண்கிறோம். பல கோவில்களில் உள்ள ஓவியங்கள் 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உள்ளவையாக விளங்குகின்றன. சமீப காலங்களில் அவை மெல்ல மெல்ல அழிவு நிலையை அடைகின்ற காரணத்தால், அதனுடைய முக்கியத்துவத்தை அறியாத அறங்காவலர்களும், அதிகாரிகளும் அதை அழித்துவிட்டு, தற்கால வண்ணங்களைக் கொண்டும், ஏதும் அறியாத ஓவியர்களைக் கொண்டும் செய்து இருப்பதாக அறிகிறோம். சில கோவில்களில் சோழர் காலத்திலும், சில கோவில்களில் நாயக்கர் காலங்களிலும் செய்யப்பட்ட ஓவியங்களாக இருக்கின்றன. அதே காலகட்டங்களில் செய்யப்பட்ட சிற்பங்களையும் இங்கு குறிப்பிட வேண்டும்.


அதற்கு அடுத்த நிலையில், ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு, அய்ரோப்பிய பாணி பயிற்சியும், அதைத் தொடர்ந்து அம்முறையிலான வெளிப்படுத்தலும் ஆரம்பமாகிறது. ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட முதல் கலைப்பள்ளி சென்னை கலைப்பள்ளி தான். இங்குதான் நவீன வரலாறு தொடங்குகிறது. தொன்மையில் தொடங்குகின்ற தமிழக ஓவிய வரலாறு நவீனமாக நீட்சியடைகிறது. நீண்ட வரலாறாகத் தொடர்கிறது.

சமூக மாற்றத்திற்கு ஒரு ஓவியன் என்ன மாதிரியான பங்களிப்பை செய்ய முடியும் ?



ஒரு ஓவியன் என்பவன், முதலில் ஒரு மனிதன். தான் வாழ்கின்ற சமூகத்தில் நிலவும் அனைத்து வகையான நிகழ்வுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. துன்பங்கள், துயரங்கள், மகிழ்ச்சிகள், சுரண்டல்கள், அடக்குமுறைகள் என்று தொடரும் நிகழ்வுகளில் பல நேரங்களில் அவனும் அகப்பட்டுக்கொள்கிறான். அவ்வாறு இல்லாவிடினும், அதன் தாக்கத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. அதற்கும் நமக்கும் சம்மந்தம் இல்லை என்று இல்லாமல், ஒரு மனிதனாக உள்வாங்கியவைகளை, ஒரு படைப்பாளனாக, ஓவியனாக, வெளிப்படுத்தி, மக்களிடத்தில் கொண்டு சென்று, விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை போராட்டத்திற்கு தயார் படுத்துகின்ற பணியைச் செய்யமுடியும். செய்ய வேண்டும்: அதோடு நில்லாமல் ஒரு சமூகத்தை வழி நடத்துகின்ற பொறுப்பும், பண்படுத்துகின்ற பொறுப்பும் கலைஞர்களுக்கு உண்டு. போராட்ட களங்களிலும் நின்று மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் பங்களிக்க முடியும். ஒரு அரசியல் கட்சியை விட, இயக்கங்களை விட கூடுதல் பொறுப்பும், அக்கறையும், கலைஞர்களுக்கு உண்டு என்பதை உணர வேண்டும்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களுக்குப் பின்பும் தனி ஈழம் சாத்தியம்



தானா?

இலங்கையில் ஏற்பட்டுள்ளது அரசியல் மாற்றமல்ல. தமிழர்களுக்கு மிகப்பெரிய பின்னடைவு. எப்போதும் இல்லாத அளவிற்கு பின்னடைவைச் சந்தித்திருக்கிறோம். ஆனால், எப்போதும் இல்லாத அளவிற்கு தமிழீழத் தமிழர்களின் போராட்டம் உலக அளவில் சென்றிருக்கிறது. புலிகள், ஒரு தனி நாட்டைக் கட்டமைத்து, அனைத்து நிர்வாகக் கட்டமைப்புகளோடு தனி அரசை, தமிழீழ அரசை நடத்திக் கொண்டிருந்த போது கிடைக்காத உலக அங்கீகாரம், விடுதலைப்புலிகள் பல இராணுவ ரீதியான வெற்றிகளைப் பெற்றபோது கிடைக்காத உலக அங்கீகாரம் இப்போது தமிழர்களின் போராட்டத்திற்கு கிடைத்திருக்கிறது. என்ன! அதிகமான இழப்புகளைச் சந்தித்து விட்டோம். ஈடு செய்ய முடியாத இழப்புகள் அவை.

இன்னும் தமிழர் பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கிறது. எவ்வித சுதந்திரமும் இல்லாமல், இருக்க இடமில்லாமல், உண்ண உணவில்லாமல் தமிழர்கள் சிரமப்படுகிறார்கள் என்பது ஒரு புறம், தமிழர்கள் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை செய்து சிங்களப்பகுதியாக மாற்றுவதும், தமிழ் ஊர் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றி சிங்களமயப்படுத்துவதும் தீவிரமாகத் தொடர்கிறது.

இலங்கையில், தமிழர்கள் சிங்களவர்களுக்கிடையில் உள்ள பிரச்னை என்பது இலங்கை சுதந்திரம்

பெற்ற அன்றிலிருந்து தொடர்கின்ற பிரச்னை. 60 ஆண்டு கால ஆயுதப் போராட்டம். இந்த 60 ஆண்டு கால போராட்டம், ஒன்றை தெளிவாக உணர்த்துகிறது. தமிழர்களும், சிங்களவர்களும் இனிமேல் சேர்ந்து வாழமுடியாது என்பதை.

இந்நிலையில் தான், 2009 மே மாத, முள்ளிவாய்க்காலில் சிங்கள பேரினவாதம் உலக வல்லாதிக்க நாடுகளின் துணையோடு தமிழரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி, இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று, இன அழிப்பைச் செய்திருக்கிறது. சிங்கள பேரினவாத அரசு, இன அழிப்பு செய்ததோடு, போர்க்குற்றமும் செய்திருக்கிறது என்பதை தொடர்ந்து வரும் சாட்சியங்கள் நிரூபிக்கின்றன.

தமிழர்கள் பூர்வகுடிகள். தமிழீழப் பகுதியான வடக்கு கிழக்கு மாகாணங்களை தாயகமாகக் கொண்டவர்கள். அவர்களுக்கான உரிமை அங்கு தொடர்ந்து மறுக்கப்படுகிறது. அதனால் தான் 60 ஆண்டுகளாக போராட்டம் தொடர்ந்தது. ஆயுதங்கள் "மௌனிக்க"ப்பட்டதை வைத்து போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதாக சிங்களமும் கருதிவிடக் கூடாது, உலகமும் கருதிவிடக் கூடாது. உலகில் விடுதலைப் போராட்டங்கள் 300 ஆண்டுகளைக் கடந்தும் நடைபெற்றிருக்கின்றன.

ஒரு நோய்க்கு சரியான மருந்து கொடுக்கப்பட்டால் தான் அந்த நோயை குணப்படுத்த முடியும். அதுபோல் ஒரு பிரச்னைக்கு, சரியான தீர்வு தான், மருந்தாக இருக்க முடியும். தமிழர்-சிங்களவர் பிரச்சினைக்கு தீர்வு "தமீழீழம்" மட்டுமே. அது இல்லாதவரை பிரச்னை இருக்கும். பிரச்னை இருக்கும் வரை போராட்டமும் தொடரும் என்பதோடு, தமிழர்கள் மீதான சிங்கள பேரினவாத அரசின் தொடர்ந்த அடக்குமுறையும், அங்கு தமிழினத்தை அழித்தொழிக்கும் முயற்சியும், தமிழிர் பகுதிகளை கபளீகரம் செய்கின்ற போக்கும், தமிழர் பகுதிகளில் இராணுவ மயப்படுத்தலும், பிரச்சினையை நீடிக்கச் செய்து, போராட்டத்தைத் தொடரச் செய்யுமே தவிர, முடக்கி விடாது. எனவே, உலக சமூகம் இதை உணர்ந்து, தமிழர் தரப்பு பக்கம் நின்று, ஆராய்ந்து, தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபையைக் கொண்டு தமிழர்களிடத்தில் நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். தமிழீழம் சாத்தியம் என்பது மட்டுமல்ல தமிழீழம் மட்டுமே தீர்வு.

சமீபத்தில் ஒரு நாளிதழுக்கு அளித்த பேட்டியில் இந்தியா பொருளாதார ரீதியாக உதவினால் போதும், அரசியல் ரீதியாக தலைவர்கள் தலையிட வேண்டாம் என்ற தொனியில் பேசியுள்ளாரே வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன். அது குறித்து உங்கள் கருத்து என்ன ?

இது உள்வீட்டுப் பிரச்சினை, தமிழகத் தலைவர்கள் வேண்டாம் என்பது போல் செய்தி வந்தது. ஆனால், அவர் அதற்கு உடனே மறுப்பு தெரிவித்து விட்டார். அவ்வாறு கூறவில்லை என்றும்,

என் கருத்து திரிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருந்தார். அவர் நேர்காணலை வெளியிட்ட இதழ் குறித்தும் நமக்குத் தெரியும். எனவே, அது குறித்து விவாதம் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

தமிழகத்தில் ஓவியம் குறித்த ஆர்வமும், புரிதலும் எப்படி இருக்கிறது?

கடந்த 30 ஆண்டுகளாக ஓவியனாக இயங்கி வருகின்றேன். தமிழகத்தின் பல இடங்களில், சிறு நகரங்களில் கூட கண்காட்சி நடத்தியிருக்கின்றோம். சாதாரண மக்கள் கூட ஓவியங்களைப் பார்த்து, கருத்துக்களை பதிவு செய்திருக்கின்றார்கள். ஓவியங்களை மக்களிடமும் கொண்டு சென்றால் ஆர்வமுடன் வந்து பார்க்கிறார்கள். புரிதலிலும் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால், ஓவியம் மக்களிடமிருந்து அன்னியப்பட்டு இருக்கிறது. மக்களுக்கும் ஓவியர்களுக்குமான இடைவெளி அதிகமாக உள்ளது. ஓவியங்களின் உள்ளடக்கம் மக்களுடையதாக இல்லை, உருவமும் மக்களுக்கானதாக இல்லை என்று மக்கள் கருதுகின்ற நிலையில், பல்வேறு முற்போக்கு சமூக இயக்கங்கள் துணையோடு நாம் மக்களிடம் நெருங்கியிருக்கின்றோம். மக்களுடைய பிரச்சினைகள் குறித்து, மக்கள் மொழியில் பேசினால், ஆர்வமுடன் பங்கேற்பதோடு புரிந்துகொண்டு எதிர்வினையாற்றவும் செய்கிறார்கள். தொடர்ச்சியான முயற்சிகளால் இன்னும் அதிகமான ஆர்வத்தையும், புரிதலையும் ஏற்படுத்த முடியும்.

ஒரு உணர்வை, சம்பவத்தை இலக்கியப் படைப்பாக்குவதை விட ஓவியமாக்குவது எளிதா ?



உணர்வு ஒன்று தான், மொழிதான் வேறு. இலக்கியப் படைப்பில் அந்த உணர்வைக் கொண்டு வருவதற்கு அந்த மொழியை இலாவகமாக பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். அதேபோல், அந்த

உணர்வை ஓவியத்தில் வெளிப்படுத்த காட்சி மொழியை சரியாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். அவ்வளவுதான். அதனதன் வடிவத்தில் அதனதன் வேலையை அது செய்யும். படைப்பாளர்களைப் பொறுத்து மாறும் என்றாலும் வாசகர்களிடம், பார்வையாளர்களிடம் அதிக ஈர்ப்பைப் பெறுவது ஓவியம் தான்.

ஒரு ஓவியனால் பொருளாதார ரீதியாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வது சாத்தியம் தானா?

தமிழகச் சூழலில், ஒரு ஓவியன் பொருளாதார ரீதியாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை. கலைப்படைப்புகளை வாங்கி சேகரிப்பது என்பது பழக்கம் இல்லாத ஒன்று. இல்லத்தில் ஓவியங்களை மாட்டி அழகுபடுத்துகின்ற பழக்கமில்லை. கேளிக்கைகளுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்கின்ற வசதி படைத்த தமிழர்கள், ஒரு ஓவியனின் ஓவியத்தை வாங்குவதற்கு பணமிருந்தும், மனமில்லை. மேலை நாடுகளில், ஏன் இந்தியாவில் மும்பை, தில்லி, கல்கத்தா போன்ற நகரங்களில் உள்ளது போல், தமிழகத்தில் இல்லை. மேலை நாடுகளோடு ஒப்பிடும் போது இந்தியாவில் மிகவும் சிரமம். இந்தியாவின் பிற நகரங்களோடு ஒப்பிடும் போது தமிழகத்தில் மிக மிகச் சிரமம். இந்திய அளவிலேயே ஓவியத்தை மட்டுமே வைத்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொண்டவர்கள் மிகச் சிலரே.

உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

மனித விடுதலையை நோக்கியே எனது பயணம். அது என் ஓவியமாக இருந்தாலும், என் எழுத்தாக இருந்தாலும், என் பேச்சாக இருந்தாலும் அதை நோக்கித்தான். என்னுடைய அனைத்துச் செயற்பாடுகளும் அதை நோக்கியே இருக்கும். செய்வதற்கு நிறைய இருக்கிறது. காலமும், சூழலும் அதைத் தீர்மானிக்கும்.

2. ஜெருசலேம் நோக்கி தமிழ் எழுத்தாளரின் பயணம்...!

10 APRIL 2012

வருடத்தின் 365 நாட்களும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிற இடம் என்றால் அது பாலஸ்தீனமாகத்தான் இருக்கும். குறிப்பாக கடந்த மார்ச் 10 ம் தேதி இஸ்ரேலிய போர் விமானங்கள்

காசாவின் பல்வேறு பகுதிளில் ஏவுகணைத்தாக்குதல் நடத்தின இதில் 10 பலியாகினர், 1964ம் ஆண்டு இஸ்ரேலின் நிலஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கைடைபிடிக்கப்படும் பாலஸ்தீனர்களின் பூமிதினமான மார்ச் 30 ஆன்று கூட, இஸ்ரேல் அதை சீர்குலைக்கும் நோக்கத்தோடு தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தகவல் சமீபத்திய தகவல் மட்டுமே. தினந்தோறும் பாலஸ்தீனத்தை அனைத்து பக்கங்களிலும் முற்றுகையிட்டுள்ள இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் காரணமாக பாலஸ்தீனம் முடக்கப்பட்டுள்ளது.

இது போன்ற சூழலில் கடந்த 2010 டிசம்பரில் புதுடெல்லியிலிருந்து தரை வழியாக 10,000 கிமீ பயணமாக பாலஸ்தீனம் சென்று, அங்கிருக்கும் மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கச் சென்ற ஆசிய பயணக்குழுவில் இடம் பெற்ற ஒரே தமிழர் எழுத்தாளர் அ.முத்துக்கிருஷ்ண்.

எழுத்தாளர் அ. முத்துக்கிருஷ்ணன் மதுரையை சேர்ந்தவர், தமிழ்ச்சூழலில் காத்திரமாக இயங்கி வருபவர். விளிம்புநிலை மக்கள், சிறுபான்மையினர், சுற்றுப்புறச்சூழல், உலகமயம், மனித உரிமைகள் என பல தலைப்புகளில் தொடர்ந்து எழுதியும் இயங்கியும் வருபவர். தன் எழுத்துக்களுக்காகத் தொடர்ந்து கடந்த

பத்தாண்டுகளாகப் பயணித்தும் வருபவர்.

இந்தியாவின் குஜராத், ஒரிசா, விதர்பா, ஜார்கண்டு, ஆந்திரம் என இந்தியாவெங்கும் களப்பணிக்காக மாதத்தின் பாதி நாட்கள் பயணத்தில் இருப்பவர். மிக அபூர்வமான பல தகவல்களைப் பார்வைகளைத் தமிழக வாசகர்களுக்கு வழங்கி வருபவர். தொடர்ந்து உயிர்மை, தலித் முரசு என பல இதழ்களில் எழுதியும் வருபவர், தன் எழுத்தின் ஒரு பகுதியாக முக்கிய படைப்புகளை தமிழுக்கு மொழியாக்கமும் செய்துள்ளார்.

குஜராத் இனப்படுகொலை குறித்த தெகல்கா ஆவணங்களை இந்திய மொழிகளில் முதலாவதாக தமிழல் நமக்கு வழங்கியவர். அத்துடன் அப்சலை தூக்கிலாடாதே, தோழர்களுடன் ஒரு பயணம்

இவரது முக்கிய மொழியாக்க நூல்கள். ஒளிராத இந்தியா, மலத்தில் தோய்ந்த மானுடம் இவரது இரு கட்டுரை தொகுதிகள். சமீபத்தில் கூடங்குளம், முல்லைபெரியாறு குறித்தும் தனது பதிவுகளை படைப்புகளாக பதிவுகளாக பதிவுசெய்திருப்வர்.

கடந்த 2010 ல் சென்றது போலவே இந்த ஆண்டும் அதே குழுவினருடன் ஜெருசலேம் செல்கிறார். கடந்த மார்ச் இறுதிவாரத்தில் புறப்பட்ட முத்துகிருஷணன்,ஜோர்டான் தலைநகரம் அம்மான் சென்று,அங்கிருந்து ஜெருசலேம் செல்கிறார். அவரது பயணத்திற்கு முன்பாக தனது பயணம் குறித்து அளித்த பிரத்யேகமான சிறு நேர்காணல் இது



2010ல் சென்று வந்த பாலஸ்தீன பயணம் குறித்து..?

பாலஸ்தீனப் பயணம் முழுவதும் சாலை வழியாக சென்றாதால் பல கலாச்சாரங்களுடன் கை குலுக்கிச் செல்வது மிகவும் புதிய அனுபவத்தை தந்தது. ஒவ்வோரு நாளும் புதிய நிலப்பரப்பு, புதிய மக்கள், புதிய மொழி என நான் இதுவரை புத்தகங்களில், புகைப்படங்களில், திரைப்படங்களில் மட்டுமே பார்த்த படித்த விடயங்களை நேரில் அனுபவித்தது வியப்பான அனுபவமாக இருந்தது. பலவித முகங்கள், பாவனைகள், நிறங்கள், உடைகள், மொழிகள், உணவுகள் என இந்த பயணம் மனிதகுல நாகரீங்கள் தோன்றிய நிலங்களின் ஊடே பயணித்தது, எங்கள் அனைவருக்குமே பிரமிப்பை தந்தது.


பாலஸ்தீனத்தின் காசா பகுதி மக்கள் படும் துயரங்களை பார்த்தது என் வாழ்நாளில் மறக்க முடியாத காட்சிகளாக என்னுள் உறைந்தது.

தற்போதைய பயணத்திற்கும், 2010 பயணத்திற்கும் என்ன வேறுபாடு?



இந்த முறை அதே குழுவினருடன் பாலஸ்தீனத்தின் மறுமுனையான மேற்கு கரை நோக்கி செல்கிறேன். ஜோர்தன் நலைநகரம் அம்மாணில் இருந்து உலகின் பல பகுதிகளில் இருந்து வரும் செயல்பாட்டாளர்கள், பத்திரிக்கையாளர்கள் கூடி ஒரு மாபெரும் பேரணியாக ஜெருசலம் நோக்கி செல்லவிருக்கிறோம். மார்ச் 30 ஆம் தேதி நாங்கள் அம்மாணில் சங்கமிக்கிறோம்.

தற்போதைய பயணத்தில் சந்திக்க இருக்கும் முக்கியஸ்தர்கள் யார்



யார்?

இந்த முறை இங்கிலாந்து முன்னால் பாராளுமன்ற உறுப்பினரும் விவா பாலஸ்தீனா நிறுவியவருமான ஜார்ஜ் காலவே, கவிஞர் இபராகிம் நசருல்லா, ஆர்ச் பிஷப் தெஸ்மந்த டுடு, டாக்டர் கார்னல் வெஸ்ட், காதா காரீமி, லெயிலா காலித என பல உலக முக்கியஸ்தர்களை சந்திக்கும் ஆவலுடன் இருக்கிறேன்.

உங்கள் பயணங்கள் சாதித்தது என்ன?



இந்த பயணத்திற்கு பின் இந்தியாவெங்கும் சென்று எங்கள் அனுபவ பகிர்வுகளை நடத்தினேம், தமிழகத்திலும் பல ஊர்களின் இந்த அனுபவங்களை பகிரும் அரங்குகள் ஏற்பாடு செய்யபட்டன. உலகம் முழுவதும் மக்கள் மீது நடக்கும் அடக்குமுறைகள் பற்றி மக்கள் அறிந்துகொள்ளும் ஆர்வத்துடன் இருந்தனர். பொதுவாகவே பிரதிகளை படித்து அறிந்துகொள்வதை விட ஒருவர் நேரில் பார்த்து வந்து விவரிக்கும் போது அந்த அனுபவம் என்பது வேறாகவே இருக்கிறது. இன்னும் அதிகப்படியான மக்களிடம் இந்த செய்திகளை கொண்டு சேர்க்கவேண்டும் என்பதே என் அவா.

அரபு நாடுகளில் பயணித்தவர் என்ற முறையில் ஈரான்,அமெரிக்கா இடையே தற்போது ஏற்பட்டுள்ள போர்சூழல் முன்றாம் உலகப்போராக மாறும் என்கிறார்கள் உங்கள் கருத்து என்ன?

மூன்றாம் உலக போராக அது மாற வாய்ப்பு இல்லை, ஈராணில் மட்டுமின்றி வளைகுடா நாடுகளில் அமெரிக்கா ஒருவித தொடர் பதற்றத்தை விதைத்த வண்ணம் உள்ளது. ஆப்கானிஸ்தான், ஈராக் தொடங்கி அவர்களது அடுத்து இலக்கு ஈராண் தான் என்பது அனைவரும் அறிந்ததே. ஈராக் என்கிற ஒரு தேசத்தை அதன் நாகரீகத்தை சிதைத்த பின்னும் அவர்களால் இது வரை பேரழிவு ஆயுதங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அதே போல் தான் இப்பொழுதும் ஈராண் மீது ஒரு தாக்குதல் தொடுக்க தக்க காரனங்களை தேடி அலைகிறது அமெரிக்கா.

அரபுநாடுகள் என்றாலே தீவிரவாதிகள் உருவாக்கப்படுகிற நாடுகள் என்ற கருத்து



உண்மைதானா?

இந்த கருத்து அமெரிக்கா திட்டமிட்டு கடந்த 35 ஆண்டுகளாக உருவாக்கியதே, இது வளைகுடாவில் உள்ள எண்ணை வளங்களை தன் கட்டுபாட்டிற்குள் கொண்டு வர அவர்கள் போட்டு ஒரு நெடுங்திட்டமே. அமெரிக்காதான் முதலில் ரஷியாவை எதிர்த்த தனது போரில் ஓசாமாவை தயார் செய்தது. ஓசாமாவுக்கு கணக்கு இல்லாத டாலர் பணம், ஆயுதங்கள் கொடுத்தது, ஓசாமா பின் லாடன் ஒரு நாட்டு பிரதமர் போல் அமெரிக்கா சென்று அரச மரியாதையுடன் அந்த நாட்டையே வலம் வந்தார். அதன் பின்னர் அவர்களின் கட்டுப்பாடை விட்டு ஓசாமா வெளியேறிய கனம் தான் அவர் தீவிரவாதியாக மாற்றப்பட்டார். இன்றும் அமெரிக்காவின் அடியாளாக இருந்து கொண்டு நீங்கள் எந்த அட்டூழியங்கள் செய்தாலும் அதற்கு கைமாறாக உலக வங்கி கடனும் சகல மரியாதைகளும் கிடைக்கும், அப்படி நீங்கள் செய்ய மறுத்தால் நீங்கள் ஒரு தீவிரவாத நாடாக கருதப்படுவீர்கள்.

3. பெண்ணுக்கு கற்பு வலியுறுத்தப்பட காரணம் என்ன?

இளமையும்,புதுமையும் குறையாமல் உயிர்போடு திகழ்கிறது நம் தமிழ்மொழி.உலகின் மூத்த மொழிகளுள் ஒன்று.பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் காலத்திற்கேற்ப தன்னை புதுபித்து கொண்டு வளர்ந்து வருகிறது. தமிழ்மொழியின் வளமை க்கு அதன் இலக்கண,இலக்கிய வளமையே அடிப்படை. அதிலும் குறிப்பாக அதன் இலக்கிய வளம் முக்கியமானது. தமிழ் இலக்கியங்கள் கற்பனை நயங்களும், பழந்தமிழர்களின் வாழ்க்கையும் பிண்ணிபிணைந்த படைப்புகள். உலகின் முதல்காப்பியமாக போற்றப்படுகிற சிலப்பதிகாரம் -மணிமேகலையும் படிக்கபடிக்க பழந்தமிழரின் வாழ்க்கையை நம் கண்முன் நிறுத்துபவை.

சிலப்பதிகாரத்தின் தொடர் காப்பியம் மணிமேகலை. மதுரை - திருமங்கலத்தை சேர்ந்த ஓய்வுபெற்ற முதுகலைத் தமிழாசிரியர் மலர்க்கொடி அவர்கள் “சமூகவியல் நோக்கில் மணிமேகலை” என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சமூகவியல் சிந்தனைகள், அரசியல், குடும்பம், பரத்தமை,பொருளாதாரம்,கல்வி,சமயம் என ஏழு தலைப்பின் கீழ் தனது ஆய்வை மிக நுட்பமாகவும்,எளிமையாகவும் செய்திருக்கிறார். தனது முனைவர் பட்ட படைப்புகளை 256 பக்கங்கள் கொண்ட நூலாக உருவாக்கியிருக்கிறார்.

ஆய்வு நூலை படிக்கபடிக்க ஏற்பட்ட சந்தேகங்கள், புதிய தகவல்களை தெரிந்து கொள்ள முனைவர் மலர்க்கொடி அவர்களை தமிழ்வாசல் வாசகர்களுக்காக நேர்காணல் செய்தேன். அவரது நேர்காணலில் கிடைத்த தகவல்கள் எப்படியெல்லாம் வாழ்த்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள் என்ற ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது....



1. சிலப்பதிகாரம் -மணிமேகலை திட்டமிட்டு உருவாக்கப்பட்ட காப்பியமா?

சிலப்பதிகாரம் -மணிமேகலை இரண்டு ஆகிய இரண்டும் இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.சிலப்பதிகாரத்தில் காணப்படும் பாத்திரங்கள் அவர்களின் பிற்கால நிலை குறித்தச்செய்திகளைக் கூறுவாதாக மணிமேகலை உருவாக்கப்பட்டது.காப்பிய மரபுப்படி நான்கு உறுதிப்பொருள்களைக் கொண்டதாகக் காப்பியங்கள் எழுதப்பட வேண்டும். சிலப்பதிகாரத்தில் அறம்,பொருள்,இன்பம் ஆகிய மூன்று பொருள்களும் வலியுறுத்தப்படுகின்றன.வீடுபேறு குறித்த கருத்துக்களை மணிமேகலை கூறுகின்றது.இதனை சிலப்பதிகாரத்தின் இறுதியில் நூற்கட்டுரை அமைந்துள்ள ...

"ஐந்திணை மருங்கின் அறம் பொருள் இன்பம் என்ற அடிகளில் சிலப்பதிகாரம் கூறும் மூன்று பொருள் குறித்தும் கூறுவதாக காணப்படுகிறது"

"மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய

சிலப்பதிகாரம் முற்றும் " என்ற அடிகளின் வழி மணிமேகலை நான்காவது உறுதிப்பொருளான வீடுபேறு குறித்தக் காப்பியம் என்பது தெரிய வருகின்றது.எனவே சிலப்பதிகாரம் -மணிமேகலை ஆகிய இரண்டும் திட்டமிட்டு உருவாக்கப்பெற்ற இட்டைகாப்பியங்களாகும்.

2.காப்பியம் என்பது உண்மை சம்பவங்களின் தொகுப்பா?அல்லது கற்பனையா?

முழுவதும் கற்பனையாக அமைந்த காப்பியங்கள் காலங்கடந்து நிற்க இயலாது.உண்மை சம்பங்களின் தொகுப்பு என்றால் அது கட்டுரையாகிவிடும். காப்பியம் என்பது உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதவேண்டும்.அனைவரின் மனங்கொள்ளுமாறு கூறுவதற்கு கற்பனை நயங்களைச் சேர்க்க வேண்டும். காப்பியம் என்பது கற்பனைகள் நிறைந்த உண்மைச்சம்பவம் எனலாம். தற்காலத் திரைப்படங்கள்,புதினங்கள் போன்றவைகளோடு ஒப்பிடலாம்.

3. பெய் என்றால் மழை பெய்யும்" அளவிற்கு பெண்ணுக்கு கற்பு வலியுறுத்தப்பட காரணம் என்ன?


கல் + பு = கற்பு = மனத்தின்மை . மனத்தின்மை என்பது தடுமாறும் மனநிலையில் இல்லாமல் தான் மேற்கொண்ட செயலைச் செய்கின்ற மனதின் உறுதித் தன்மையைக் குறிக்கின்ற குறியீடாகும்.

ஒரு பெண்ணிடம் இருக்கும் மனத்தின்மையால் சமூக ஒழுங்கும் கட்டுப்பாடும் இடையறாமல் இயங்கும்.

அடுத்துவரும் தலைமுறைகளான குழந்தைகளும் பெண்ணின் வழி உறுதி பெறுவதால் சமூகம் வளர்ச்சி நிலையை அடையும்.ஆதலால்தான் பெண்ணுக்கு கற்பு வலியுறுத்தப்பட்டது.

பின்னால் ஆணாதிக்கச் சமுதாயத்தில் தன்னுடைய பிள்ளைகளுக்கு தான் சேர்த்த செல்வமெல்லாம் சேர வேண்டும் என்ற நிலையில் கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பெண் மட்டுமல்ல ஆணும் "கற்பு" (மனத்தின்மை) உடையவராக இருந்தால் அவர்களாலும் மழை பெய்விக்க முடியும்.

*4.**அமுதசுரபியை வைத்து பசிபோக்கும் அளவிற்கு மணிமேகலை காலம் வறுமையும்,வறட்சியும் இருந்த காலமா?***



மணிமேகலை காலம் வறுமையும்,வறட்சியும் நிறைந்த காலமல்ல.வளமையான காலம் தான்.இன்று வளமையான நாடுகள் என்று பட்டியலிடப்படும் நாடுகளிலும் வறுமையுற்றவர்களை காண முடிகின்றது. மணிமேகலை குருடர் ,செவிடர், முடம்பட்டோர் , பாதுகாப்போர் இல்லாதவர் ,ஊமையர் ,நோய்வாய்ப்பட்டோர் தவவேடங்களும்,விரதங்களும் உடையவர்,பசிநோய் அடைந்தவர் சோம்பலின் விளைவாக வறுமையை அடைந்தவர் ,பல்வேறு ஊர்களிலிருந்து பசியுடன் வந்தவர் ஆகியோர்களுக்கு உணவு வழங்கினார். இதை வறுமை ,வறட்சியால் வழங்கினார் என்று கொள்ள இயலாது.

5.சக்கரவளாக்கோட்டம் என்ற பெயரில் , கடல் அருங்காட்சியகம் மணிமேகலை காலத்தில் இருந்தது உண்மைதானா?

சக்கரவாளக்கோட்டம் ,சுடுகாட்டுப்பகுதிக்குள் அமைந்திருந்ததால் பொதுவாக அந்த இடம் சுடுகாட்டுக்கோட்டம் என்றழைக்க ப்பட்டது. பிணத்தை எரிப்பதற்காகவோ,புதைப்பதற்காகவோ,தாழியில் (மிகப்பெரியமண்பானையில் இறந்தவர்களின் உடலை வைத்து புதைப்பது தாழிஎனப்படுகிறது) அடைப்பதற்காகவோ மக்கள் செல்வர். சிலர் பிணங்களை பறவைகள்,விலங்குகள் ஆகியவற்றிற்கு உணவாகட்டும் என்று வீசி எறிந்து விட்டு

வந்துவிடுவார்கள்.

அங்கு சக்கரவளாம் என்னும் அமைப்பு சதையால் செய்ப்பட்ட பாவைகளை (பொம்மைகள்) உடைதாயிருந்தது.

"கடலினால் சுழப்பட்டுள்ள சக்கரவாளம் என்னும் மலைக்கு உட்பட்ட இடத்தில் நடுவில் மேருமலை,பக்கத்தில் எழுவகைக் குலமலைகள்,நான்கு வகைப்பட்ட பெரிதானத் தீவுகள்,இரண்டாயிரம் எனப்படும் சிறுசிறுதீவுகள் முதலியவற்றை அமைத்து அவ்விடங்களிலே வாழ்கின்ற உயிர்கள் என இவை அனைத்தும் மண்ணால் செய்யப்பட்டிருந்தன" - என்று மணிமேகலை காட்டுகின்றது,கடலில் வாழும் உயிரினங்கள் மட்டுமல்லாமல் மலைகள் தீவுகளில் வாழும் உயிரனங்களும் அமைக்கப்பட்டுருந்ததால் இதை கடல் அருங்காட்சியகம் என்று சொல்ல இயலாது. அப்போதிருந்த நில உலகின் மாதரிப்படிவம் எனலாம்.



6.சிலப்பதிகாரமும் - மணிமேகலையும் மன்னராட்சிக்கு எதிரான காப்பியமா?

சிலப்பதிகாரம் - மணிமேகலை இரண்டிலும் மன்னர்களுக்கு எதிரான நிகழ்வுகள் ஏதுமில்லை. மன்னர்கள் முதன்மைப்படுத்தப்படவில்லை என்பதற்காக மன்னர்களுக்கு எதிரானது என்று கூறமுடியாது. வணிகர்குல மக்களைத் தலைமையாகக்கொண்டு எழுந்த காப்பியங்கள் ஆகும். பின்னாளில் சாமானிய மக்களைப் பாட்டுடை த்தலைவராக கொண்டு எழுதப்பட்ட சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

7.மணிமேகலை பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான படைப்பா?

சுயமாகச்சிந்திக்காமல் சமூகக்கொள்கைகளைப் பின்பற்றுவதுதான் அடிமைத்தனம்.மணிமேகலை பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான படைப்பு தான். அடிமையாக வாழ்ந்த பெண் சமூகத்தைக் காட்டிய சாத்தனார், சுயமாகச் சிந்திக்கவும் செயல்படவும் கூடிய பாத்திரங்களாக மணிமேகலை,சுதமதி,விசாகை முதியோரைப்படைத்துள்ளார்.

8.மணிபல்லவத்தீவு உள்ளிட்ட தீவுகள் மணிமேகலையில் குறிப்பிடப்படுகின்றன, அவை இன்றைக்கு இருக்கின்றனவா?

மணிபல்லவத்தீவு மனிதர்கள் வசிக்கின்ற இடமாகக் காட்டப்படவில்லை. ஆயினும் கடற்பயணம் மேற்கொள்வோர் தங்கி இளைப்பாறுகின்ற இடமாக இருந்ததனை அறியமுடிகின்றது. இலங்கையின் யாழ்பாணத்திற்கும், காவிரிப்பூம்பட்டினத்திற்கும் இடையே இத் தீவு இருந்திருக்கலாம். இப்போது அதன் நிலை தெரியவில்லை.

இரத்தினத்தீவு,அதிலுள்ள சமந்த மலை இரண்டும் மணிமேகலையில் பேசப்படுகின்றது.சமந்தமலை என்பது இலங்கையின் சிவனொளி பாதமலை என்கின்றனர் அறிஞர்கள்.அங்குள்ள புத்தபாதபீடிகை இன்றும் வணங்கப்படுவதாக உள்ளது. இலங்கையிலுள்ள இரத்தினபுரி நகரம் இரத்தினத்தீவாக இருந்திருக்கலாம்.சாவகம் என்றழைக்கப்படும் இடம் தற்போதுள்ள ஜாவாத்தீவுகள்.

9.அங்கிகரிக்கப்பட்ட பரத்தமை (பாலியல் தொழில்)இன்றைக்கு இருந்தால் பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் குறையுமா?

அங்கீகரிக்கப்பட்ட பத்தமை இருந்த காலத்திலும்(சிலப்பதிகாரம் -மணிமேகலை) பெண்கள் தனித்துச் செல்ல முடியாத நிலை இருந்தது.தனித்துச்சென்ற (மணிமேகலையின் முக்கிய பெண்பாத்திரம் சுதமதி) சுதமதி ஒருவனால் கவர்ந்து செல்லப்பட்டாள். சிறிது நாட்களுக்கு பின் தனித்து விடப்பட்டாள்.தன் இடத்திற்கோ அல்லது தந்தையிடமோ செல்ல இயலாத நிலையில் சமணத்துறவியானாள். ககந்தன் என்ற மன்னனுக்கு இரு மகன்கள். ஒருவன் தனியாக வந்த முதிர்கன்னி ஒருத்தியிடம் தவறாக நடக்கமுயன்றான். மற்றொரு மகன் தனியாக சென்ற திருமணமான பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றான்.இருமகன்களையும் கொன்று மன்னன் முறை செய்தான். பரத்தமை பாலியல் கொடுமைக்களுக்கு தீர்வல்ல.

10.அள்ள அள்ள குறையாத அமுதசுரபி என்ன ஆனது? இன்றைக்கு கிடைக்குமா?

பசித்தவர்களுக்கு உணவிடுதல் தமிழர்களின் சிறப்பு இயல்புகளில் ஒன்று. அதை வலியுறுத்த எண்ணிய சாத்தனார் அமுதசுரபியை படைத்தார். உணவிடுதலின் குறியீடுதான் அமுதசுரபி. பசித்து

வருபவர்களின் பசியை நீக்க உணவைத் தருகின்ற அருள் நெஞ்சங்களே அமுதசுரபி. அள்ள அள்ளக் குறையாத உணவு பெருகுவது பசி என்று வந்தோர்க்கெல்லாம் உணவு படைக்கின்ற உள்ளம் வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான்.

அமுதசுரபி என்பது சாத்தனாரின் காப்பியக்கற்பனை. பசி,பட்டினி ஆகியவற்றை நீக்கவேண்டும் என்பதற்காக படைக்கப்பட்டதுதான் அமுதசுரபி.என அறிஞர் சோ.நா.கந்தசாமி குறிப்பிடுகின்றார்.

பாரதிதாசன்,

கொடயுள்ளம் அமுதசுரபியாம்

பின் கொடுப்பவன்

அமுதசுரபி உடைவன் ஆனான்

என்ற கருத்தின்படி அமுதசுரபி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நேர்காணல் அவரது ஆய்வின் சிறுபகுதி மட்டுமே.தமிழ் ஆர்வலர்களும், இலக்கிய ஆர்வலர்களும் முழுமையாக படிக்க வேண்டிய நூல். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், பழந்தமிழ் இலக்கியங்ளை பாதுகாக்கவும் இப்படியான ஆய்வுகள் ஆவசியமாகிறது. "சமூகவியல் நோக்கில் மணிமேகலை" ஒவ்வொரு தமிழரும் வாங்கி படிக்கவேண்டி நூலாகும்.

முனைவர் மலர்க்கொடி அவர்களை தொடர்பு கொள்ளவும் ,நூல்களை பெறவும் 8220699256,8903582121 என்ற எண்களில் தொடர்புகொள்ளுவும்.

முகவரி:

திருமதி மலர்க்கொடி

3/124 ஆத்மலிங்காநகர்

